செய்தி வெளியீடு எண் : 2574 நாள் : 20.12.2023

<u>செய்தி வெளியீடு</u>

**திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், நேரில் சந்தித்து நிவாரண உதவிகள் வழங்கினார்.**

குமரிக்கடலில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் 16.12.2023 அன்று முதல், புயல் இல்லாமலேயே அதீத மழை பெய்தது. இதனால் 4 மாவட்டங்களும் மழைநீரால் சூழப்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், இன்று(20.12.2023) பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிவாரண உதவிகள் வழங்கினார்.

திருநெல்வேலி, நிவாரண முகாம் முத்து மஹாலில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள ஆலயங்குடி, அனுராதநல்லூர், முத்தாலம்குறிச்சி, பெந்தம்பள்ளி, சமத்துவபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு, பால், பிஸ்கட், அரிசி, பருப்பு, பாய், போர்வை மற்றும் தண்ணீர் பாட்டில் போன்ற நிவாரணப் பொருட்களை, துறை சார்ந்த அதிகாரிகளுடன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், ஸ்ரீவைகுண்டம் பகுதிக்குச் சென்றுக் கொண்டிருந்தபோது, ஆதிச்சநல்லூர் பகுதியில் வசித்த மக்களைச் சந்தித்து, பால்பாக்கெட்களை வழங்கினார்கள். இப்பகுதியில் உள்ள மக்களுக்கும், உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்க அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

மேலும், கருங்குளம் அருகே பொதுமக்கள் மூன்று நாளாக காணாமல் போன சர்க்கரை பீர்முகமது என்பவரை கண்டுப்பிடித்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர், அவர்களின் கோரிக்கையினை ஏற்று, தேசிய பேரிடர் மீட்பு இராணுவ வீரர்களை வரவழைத்து, காணாமல் போன சர்க்கரை பீர்முகமது என்பவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் பகுதியில் உள்ள கண்ணபிரான் தெருவிற்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து பால் மற்றும் பிஸ்கெட்களை வழங்கினார்கள்.

மேலும், ஸ்ரீவைகுண்டம் அரசு மகப்பேறு மருத்துவமனைக்குச் சென்று ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள், மருத்துவமனை வளாகத்தில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் பணியை விரைவுப்படுத்தி, மருத்துவமனைக்கு, நோயாளிகள் வருகை தரும் வகையில் மழைநீர் அகற்றப்பட்டது. மழை வெள்ளநீரால் மருந்துகள் அடித்துச் செல்லப்பட்டிருந்தை கண்டு, மருந்துகளை வரவழைக்க உத்தரவிட்டார்கள்.

மழைநீரால் சூழப்பட்ட ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்குச் சென்று, ஆய்வுச் செய்த அமைச்சர் அவர்கள், மோட்டர் மூலம் மழைநீரை அகற்ற அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள்.

மழைநீர் சூழ்ந்துள்ள ஸ்ரீவைகுண்டம், நவலட்சுமிபுரத்திற்கு நிவாரண உதவிகள் வழுங்கச் சென்ற அமைச்சர் அவர்களிடம், அப்பகுதி பொது மக்கள், மழைநீரில் சிக்கி மூன்று சடலங்கள் இருப்பதாக தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஜே.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மூன்று சடலங்களை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி பகுதியில் உள்ள இந்து அரசு மேல்நிலைப்பள்ளி நிவாரண முகாமில், பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள, பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் உணவு தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்தப் பள்ளியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார்கள்.

ஆழ்வார்திருநகரி ஆற்றை ஒட்டியுள்ள பகுதிக்குச் சென்று, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பால் பாக்கெட்டுகளை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, கமலாபாத் என்ற இடத்தில் உள்ள மசூதி நிவாரண முகாமிற்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பால், போர்வை, பாய் போன்ற நிவாரண உதவிகள் வழங்கினார்கள். அப்பகுதி பொது மக்கள் மழைவெள்ளத்தால் பாதிக்கப்படாதவாறு, நிரந்தர தீர்வு காண அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

கீழ்ஸ்ரீவைகுண்டம் பகுதியில், கிறிஸ்த்தவ ஆலய நிவாரண முகாமிலும், இந்து கோவில் முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார்கள். நாளை அவர்களுக்கு தேவையான உணவு வழங்க ஏற்பாடுகள் செய்ய அலுவலர்களை அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட 18 பகுதிகளுக்கு, நாளை (21.12.2023) உணவு, நிவாரண பொருட்கள் மற்றும் முகாம்களில் தங்க வைப்பட்டுள்ள பொது மக்களின் பாதுகாப்பு குறித்து,

அதிகாரிகள், அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியின்போது, ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் திரு. இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் திரு. இரா.விஸ்வநாத், நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in